DINATHANTHI 18 AUG 09



ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் உரையாற்றியபோது எடுத்த படம்.

# கலாசார அடிப்படையில் கல்வி கற்பிப்பதால் நம் பாரம்பரியம் வளரும்

## ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் பேச்சு

நாகர்கோவில், ஆக.18– கலாசார அடிப்படையில் கல்வி கற்பிப்பதால் நம் பாரம்பரியம் வளரும் என்று ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் கூறினார்.

### கிராம பள்ளி

கோவை ஈஷா யோகா மையத்தின் நிறுவனரான சத்குரு ஜக்கி வாசுதேவ், ஈஷா அறக்கட்டளை சார்பாக ஈஷா வித்யா திட்டத்தை தொடங்கி உள்ளார்.

அந்த திட்டத்தின் கீழ் சுசீந்திரம் அருகே உள்ள தேரூரை அடுத்த கொரண்டியில் ஈஷா வித்யா கிராமப்பள்ளி 3 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. அங்கு 386 குழந்தைகள் படிக்கிறார்கள். அந்த பள்ளிக்கு நேற்று சத்குரு ஜக்கி வாசுதேவ் வந்து பள்ளி ஆசிரியர் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

### ஊக்கத்தொகை

அதைத்தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் ஜக்கிவாசுதேவ் கலந்து கொண்டார். ஈஷா கல்வி அறக்கட்டளை திட்ட இயக்குனர் வெங்கட் கல்வி திட்டத்தை விளக்கி பேசினார். டெல்லி மேல்–சபை முன்னாள் உறுப்பினர் கே.பி.கே.குமரன் வாழ்த்துரை வழங்கினார். ஜக்கிவாசுதேவ் 197 மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையை பள்ளி முதல்வர் ஷைலா குமாரியிடம் வழங்கினார்.

அதைத்தொடர்ந்து கூட்டத்தினர் மத்தியில் ஜக்கி வாசுதேவ் பேசும் போது கூறியதாவது :–

### பாரம்பரியம் வளரும்

இந்தியாவில் நகரத்து குழந்தைகளுடன் போட்டி போடும் அளவுக்கு கிராமத்து குழந்தைகளும் ஆங்கிலம், கம்ப்யூட்டர் ஆகிய திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும். அதற்காக கிராமப்பகுதியில் ஈஷா கல்வி அறக்கட்டளை சார்பில் கிராமப்பள்ளி தொடங்கப்பட்டு வருகிறது.

வறுமையின் கீழ் உள்ள குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக ஈஷா தொண்டர்கள் புதன்கிழமை தோறும் விரதம் இருந்து, சாப்பாட்டுக்கான பணத்தை வழங்குவதை பாராட்டுகிறேன். ஈஷா கிராமப்பள்ளியில் கலாசார அடிப்படையில் யோகா கற்று தரப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் மனம் மற்றும் உடல் உறுதி உள்ளவர்களாக உருவாகிறார்கள். கலாசார அடிப்படையில் கல்வி கற்பிப்பதால் நம் பாரம்பரியம் வளர்கிறது.

இதனால் எதிர்காலத்தில் பணம் சம்பாதிப்பது மட்டுமல்லாமல், உயர்ந்த நிலையில் வாழ தகுதி படைத்தவர்களாகிறார்கள். தற்போது இந்தியா வேற்றுமையில் ஒற்றுமையுடன் இருப்பதற்கு காரணம் அடிப்படை கலாசாரங்கள் தான்.

மேற்கண்டவாறு ஜக்கி வாசுதேவ் கூறினார்.

அதைத்தொடர்ந்து பள்ளி மாணவ–மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடந்தது. தொடக்கத்தில் ஈஷா வித்யா பள்ளி முதல்வர் ஷைலா குமாரி வரவேற்று பேசினார்.